


தோற்றம்: 7.11.1922 மறைவு: 16.03.1989

குழந்தைக் கவிஞர் **அழ. வள்ளியப்பா** அவர்களின்

படைப்பும் பணியும்

ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்.



நேருஜியை அவரது பிறந்த நாளில் (14.11.1956) சந்தித்து உரையாடுகிறார், டில்லியில் சாகித்ய அகாதமி ஏற்பாடு செய்த அனைத்திந்திய புத்தகக் காட்சியில்




மூதறிஞர் ராஜாஜியுடன் - புகழ்வாய்ந்த அமெரிக்கக் குழந்தை எழுத்தாளர் மன்றோ லீஃபுக்கு குழந்தை எழுத்தாளர் சங்கம் அளித்த வரவேற்பில்

48-5



குடியரசுத் தலைவராயிருந்த
பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களுடன்



அஞ்சல் துறை வெளியிட்ட குழந்தைக் கவிஞரின் நினைவு சிறப்பு அஞ்சல் உறை

பிறந்த ஊர்: *புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இராயவரம்.*

பெற்றோர்: *அழகப்ப செட்டியார் - உமையாள் ஆச்சி.*

கல்வி: *இராயவரம் சு.கதி. காந்தி பாடசாலையிலும், இராமச்சந்திரபுரம் ஸ்ரீ பூமீஸ்வர ஸ்வாமி உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார். பின்னர் பேராசிரியர்கள் கு. மதுரை முதலியார், இளவழகனார், டாக்டர் இராச மாணிக்கனார் ஆகியோரிடம் சில காலம் தமிழ் பயின்றார்.*

கவிதை எழுதத் தொடங்கியது: *அவரது 13வது வயதில் கவிதை எழுதத் தொடங்கினார்.*

திருமணம்: *இராயவரத்தில் பிறந்த வள்ளியம்மையை 4.02.1942ஆம் நாளில் மணந்தார்.*

பிள்ளைகள், மருமக்கள்:

அலமேலு - அழகப்பன்
அழகப்பன் - சீத்தாலெட்சுமி
கஸ்தூரி - அருணாசலம்
உமையாள் - வள்ளியப்பன்
தேவி - நாச்சியப்பன்

பேரப் பிள்ளைகள்:

அழ. இராமசாமி, நா. விஜி
அ. பிரபு, அ. பிரதீப்
அரு. ஆனந்த், அரு. விவேக்
வ. அரவிந்த்
நா. சிந்து, நா. வருண்

ஆற்றிய பணிகள்: *1940ஆம் ஆண்டில் வை. கோவிந்தன் அவர்களின் 'சக்தி' அலுவலகத்தில் பொருளாளராகச்*

சேர்ந்தார். 'சக்தி' இதழின் ஆசிரியர் தி.ஜ.ர. அவர்களின் ஆதரவால் சக்தியில் எழுதி, எழுத்தாளரானார்.

1941ஆம் ஆண்டில் இந்தியன் வங்கியில் சேர்ந்து, தம் நேர்மையான உழைப்பால் பதவி உயர்வு பெற்று, சென்னையிலுள்ள பல கிளைகளிலும், காரைக்குடி கிளையிலும் மேலாளராகப் பணியாற்றினார். பிறகு காரைக்குடி வட்டார மேலாளராகப் பணியாற்றி 30.11.1982ஆம் நாள் ஓய்வு பெற்றார்.

இந்தியன் வங்கியின் அனுமதி பெற்று (Ford Foundation) நிறுவிய தென் மொழிப் புத்தக டிரஸ்டின் குழந்தைப் புத்தக அலுவலராக (1957-1962) பணிபுரிந்தார். அச்சமயத்தில் தென்னிந்திய மொழிகளில் (தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்) குழந்தைகளுக்கான பல சிறந்த நூல்கள் வெளிவந்து பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றன.

பத்திரிகைத் தொடர்புகள்: 1944 முதல் 1951 வரை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பாலர் மலர்', 'டமாரம்', 'சங்கு', 1951 முதல் 1954 வரை வெளிவந்த 'பூஞ்சோலை', 1983 முதல் 1989 (தம் வாழ்நாள் இறுதி வரை) கல்கி நிறுவனத்தின் சிறுவர் மாத இதழான 'கோகுலம்' ஆகிய சிறுவர் பத்திரிகைகளுக்குக் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலக்கியப் பணிகள்: 1950ஆம் ஆண்டில் குழந்தைகளுக்காக எழுதுவோரை ஒன்று சேர்த்து, 'சக்தி' வை. கோவிந்தன் அவர்களின் தலைமையில், குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவினார். தமிழில் குழந்தை இலக்கியம் தழைக்கவும், குழந்தை எழுத்தாளர் பலர் உருவாகவும் துணை நின்ற இச்சங்கத்தில் 1950 முதல் 1955 வரை பொதுச்செயலாளராகவும், 1956 முதல் 1961 வரை

தலைவராகவும், 1961 முதல் 1977 வரை ஆலோசகராகவும், பின்னர் மீண்டும் தலைவராகவும் பணியாற்றினார்.

1956ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் 'ஆனந்த விகடன்' ஆசிரியர் தேவன் அவர்கள் தலைவராக இருந்தபோது, பொதுச் செயலாளரானார். மூன்று ஆண்டுகள் பொதுச் செயலாளராகவும், பிறகு துணைத் தலைவராகவும் இருந்து, 1966ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

தமிழ் எழுத்தாளர் சங்கம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் (1961) நடத்திய மாநாட்டிற்கும், பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் தலைமையில் (1962) அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கப் பேரவை நடத்திய மாநாட்டிற்கும் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்தார்.

தமிழக அரசு நடத்திய பாரதியாரின் 81ஆம் ஆண்டு விழாக் குழுவில் உறுப்பினராக இருந்து, பாரதி கண்காட்சி நடத்தினார்.

1979 அக்டோபரில் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை சொற்பொழிவாக, 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்ற தலைப்பில் மூன்று நாட்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார். பின்னர், இந்த உரை புத்தகமாக வெளிவந்தது.

மதுரையில் நடைபெற்ற 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டின் கருத்தரங்கு அமைப்புக் குழு உறுப்பினராக இருந்ததோடு, 'தமிழில் குழந்தை இலக்கியம்' எனும் ஆய்வுக்கட்டுரை படித்தார்.

முதல் ஆறு குழந்தை இலக்கிய மாநாடுகளை சென்னையிலும், ஏழாவது மாநாட்டை 1981ல் காரைக்குடியிலும், எட்டாவது மாநாட்டை 1987ல் கோவையிலும் நடத்தினார். இம்மாநாடுகளில் குழந்தைப் புத்தகக் கண்காட்சி, குழந்தை எழுத்தாளர் புகைப்படக்காட்சி, குழந்தைகளின் கலை நிகழ்ச்சி, மற்றும் குழந்தைகளுக்கான புதிய நூல் வெளியீடு போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

1956ல் டில்லியில் சாகித்ய அகாதெமி நடத்திய அகில இந்தியப் புத்தகக் கண்காட்சியின், தமிழ்ப் பகுதி அமைப்பாளராகப் பணிபுரிந்தார்.

1961ல் கொழும்பு நகரில், இலங்கைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய சர்வதேசப் புத்தகக் காட்சியைத் துவக்கி வைத்தார்.

1962ல் கொழும்பு நகரில் நடந்த யுனெஸ்கோ கருத்தரங்கில், இந்திய நூலாசிரியர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

சிம்லா, புவனேஸ்வர், பெங்களூர், மைசூர், டில்லி முதலிய இடங்களில் நடைபெற்ற குழந்தை இலக்கியக் கருத்தரங்குகளில் பங்கு பெற்றார்.

யுனெஸ்கோவிற்காக, தமிழில் குழந்தைகள் படிக்கும் பழக்கம் பற்றி ஆராய்ந்து, இவர் தயாரித்த அறிக்கை நூலாக வெளி வந்துள்ளது.

தமிழில் எழுத்தாளர்கள் பற்றிய 'யார் - எவர்?' என்ற விவரத் தொகுப்பு நூல்கள் நான்கும், 1987ல் வெளியிடப் பெற்ற 'Who's Who of Tamil Writers for Children என்ற நூலும் இவரது பெரு முயற்சியால் வெளிவந்தவைகளே.

எழுதிய நூல்கள்: குழந்தைகளுக்காக 50 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். 23 குழந்தைப் பாடல்கள் அடங்கிய 'மலரும் உள்ளம்' என்ற இவரது முதல் புத்தகத்தை 1944ல் வெளியிட்டவர் திரு. செ.மெ. பழநியப்ப செட்டியார். நூலுக்கு அழகிய பெயரைச் சூட்டியவர் மதுரை வங்கியின் தலைவராக இருந்த திரு. இராம. முத்தையா அவர்கள்.

மத்திய அரசின் பரிசு பெற்ற நூல்கள்

- மலரும் உள்ளம் - முதல் தொகுதி
- பாட்டிலே காந்தி கதை

தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்கள்

- மலரும் உள்ளம் - முதல் தொகுதி
- பாப்பாவுக்குப் பாட்டு
- நல்ல நண்பர்கள்
- பெரியோர் வாழ்விலே
- சின்னஞ்சிறு வயதில்
- பிள்ளைப் பருவத்திலே

குழந்தைக் கவிஞரின் முக்கிய விழாக்கள்

இவரது குழந்தை இலக்கியப் பணியின் வெள்ளி விழாவை, வள்ளல் திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் அமைக்கப்பெற்ற குழு, 22.11.1970ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் பல அரிய கட்டுரைகள் அடங்கிய மலரை, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. மா. அனந்தநாராயணன் அவர்கள் வெளியிட்டார். கவிஞர் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் தலைமையில் இவரைப் பற்றி 25 கவிஞர்கள் பாடி அரங்கேற்றிய

கவிதைகளை அன்றைய தினமே 'பாரதிபாலர் கலையரங்கம்' நூலாக வெளியிட்டது. பாரதியார், கவிமணி, வள்ளியப்பா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை 'சிறுவருக்கு கவிதை தந்தவர் கதை' என்ற தலைப்பில் புலவர் திரு. அப்துல் கரீம் எழுதி, நாமக்கல் கவிஞர் வெளியிட்டார். இந்நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது.

1972ல், இவரது 50வது பிறந்த நாள் விழாவை, வானொலி சிறுவர் சங்கப் பேரவைத் தலைவர் புலவர் திரு. தணிகை உலகநாதன் அவர்கள் தலைமையில் பல சிறுவர் சங்கங்கள் சேர்ந்து நடத்தினர். அவ்விழாவில், கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் திரு. பெ. தூரன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

காரைக்குடி சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு விழாக் குழு 1980ஆம் ஆண்டு 'குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா அறக் கட்டளை' ஒன்றை நிறுவி, இராமசாமி தமிழ்க் கல்லூரியிடம் ஒப்படைத்தது. இதன் வாயிலாக காரைக்குடி வட்டாரத்தைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகளுக்கு வள்ளியப்பா பாடல் போட்டிகள் நடத்தி ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வருகிறது.

4.11.1982ல் பிள்ளையார்பட்டியில் நடந்த மணி விழாவும், தவத்திரு குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி ஆதீனத்தில் ஏற்பாடு செய்த பாராட்டு விழாவும் சிறப்பாக நடந்தன. ராஜா சர் முத்தையா செட்டியார், வி.என்.சிதம்பரம், சௌந்தரா கைலாசம், சிலம்பொலி செல்லப்பனார் முதலிய அறிஞர்கள் பாராட்டுரை வழங்கினர். காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் டாக்டர் வ.சுப. மாணிக்கம் தலைமையில் கவிஞர்கள் செல்ல கணபதியும், ரா. பொன்ராசனும் தொகுத்த 'அன்புக்

குழந்தைகளுக்கு, அறுபது பாடல்கள்' என்ற நூலை மதுரை வங்கித் தலைவராயிருந்த இராம. முத்தையா வெளி யிட்டார்.

மணிவிழாவையொட்டி, இராயவரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் இவர் இயற்றிய 'சக்தி மிக்க தெய்வம் எங்கள் முத்துமாரி அம்பிகை' எனத் தொடங்கும் பாடலை, சலவைக் கல்லில் பொறித்துப் பதித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

கவிஞரின் 70ஆம் ஆண்டு நிறைவு விழா கீழச்சிவல் பட்டியில் சிறப்பாக நடந்தது. 'குழந்தை இலக்கியம் நேற்று- இன்று- நாளை' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

கவிஞரின் 80ஆம் ஆண்டு நிறைவு விழா இராயவரத்தில் கொண்டாடப்பெற்றது. அவரைப் பற்றி எண்பது நண்பர்கள் எழுதிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'நினைவில் வாழும் குழந்தைக் கவிஞர்' என்ற நூல் வெளியிடப் பெற்றது.

கவிஞரின் 85ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி, காரைக்குடியில் 7.11.2006 அன்று அவருடைய குழந்தை இலக்கிய சேவைகளைப் பாராட்டும் வகையில், இந்திய அஞ்சல் துறை, குழந்தைக் கவிஞர் நினைவு சிறப்பு அஞ்சல் உறை வெளியிட்டது, www.geocities.com/alvalliappa என்ற இணையதளம் துவக்கப்பட்டது. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் விழா சிறப்பாக நடைபெற்றது.

கவிஞர் மறைவுக்குப் பின் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான நவம்பர் 7ந் தேதியை 'குழந்தை இலக்கிய தின'மாக அவருடைய குடும்பத்தினர் கொண்டாடி

வருகின்றனர். அன்று கவிஞரின் படைப்புகளைக் குழந்தைகள் அரங்கேற்றுவர்.

குழந்தைக் கவிஞரை குரு என்று போற்றி வரும் கவிஞர் திரு. செல்லகணபதி, டாக்டர் பூவண்ணன் இருவரும் 'வள்ளியப்பா இலக்கிய வட்டம்' என்ற அமைப்பைத் துவக்கி ஆண்டுதோறும் தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் 'குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா கலை இலக்கியப் பெருவிழா' நடத்தி வருகின்றனர். பள்ளிக் குழந்தைகளுக்கு ஆடல், பாடல், பேச்சுப் போட்டிகள் நடத்தி போட்டிகளில் முதலிடம் பெறும் பள்ளிக்கு 'வள்ளியப்பா கலை விருது' மற்றும் குழந்தை இலக் கியத்திற்கு அரிய சேவை செய்த எழுத்தாளர் ஒருவருக்கு 'வள்ளியப்பா இலக்கிய விருது', பதிப்பாளர் ஒருவருக்கு 'வள்ளியப்பா பதிப்பாளர் விருது' என விருதுகள் வழங்கி வருகின்றனர்.

பாராட்டுகள்

1961ல் நடந்த மூன்றாவது குழந்தை இலக்கிய மாநாட்டில், டாக்டர் ஜாகீர் ஹுசேன் அவர்கள் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்.

1963ல் லக்னோவில் நடந்த அனைத்திந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் 'தமிழில் குழந்தை இலக்கிய முன்னோடி' என்ற பாராட்டும், பதக்கமும் வழங்கப் பெற்றன.

1975ல் தமிழ்க் கவிஞர் மன்றம் நடத்திய முதல் மாநாட்டில் கேடயம் வழங்கப்பெற்றது.

1976ல் குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளி விழாவில் குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்டி குடியரசுத்

தலைவர் ஃபக்ருதீன் அலி அகமது அவர்கள் பொன்னாடை போர்த்தி, கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.

1984ல் கல்கத்தாவில் நடந்த கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்க வெள்ளி விழாவில் அமைச்சர் ஜாடின் சக்கரவர்த்தி பாராட்டிக் கௌரவித்தார்.

1985ல் புது டில்லியில் நடந்த Indian Council for Child Education மாநாட்டில் பாராளுமன்றத் தலைவர் பலராம் ஜாக்கர் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.

1989ல் கான்பூரில், குழந்தைகள் நலச் சங்கத்தின் சார்பில், நடைபெற்ற விழாவில் கான்பூர் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் விஷண் நாராயண் ஆஸ்தானா கேடயமும், சான்றிதழும் வழங்கினார்.

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு 40 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருவதைப் பாராட்டி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'தமிழன்னை' விருது வழங்கிக் கௌரவித்தது.

கவிமணி, ராஜாஜி, கல்கி, டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு.வ., நாமக்கல் கவிஞர், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, ஐயன் பெருமாள் கோனார், தி.ஜ.ர., கொத்தமங்கலம் சுப்பு, டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் ஆகியோரது பேரன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சிறப்புப் பட்டங்கள்: கல்கண்டு ஆசிரியர் திரு. தமிழ் வாணன் அவர்கள், வள்ளியப்பாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'குழந்தைக் கவிஞர்' என்றே குறிப்பிடுவார். அவரைப் பின்பற்றி பலரும் 'குழந்தைக் கவிஞர்' என்றே அழைக்கத் துவங்கினர். இந்தச் சிறப்புப் பெயரே

வள்ளியப்பா எனும் இயற்பெயரை மிஞ்சிய புகழைப் பெற்றுள்ளது.

இவரது பொன்விழாவையொட்டி, பாரதி இளைஞர் சங்க சார்பில் 'பிள்ளைக் கவியரசு' என்ற சிறப்புப் பட்டத்தை நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் வழங்கினார்கள்.

1979ல் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு விழாக் குழு, இவரது குழந்தை இலக்கியத் தொண்டினைப் பாராட்டி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்த, கவிஞர் முடியரசன் 'மழலைக் கவிச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கினார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1982ல் 'வாழ்நாள் முழுவதும் குழந்தை இலக்கிய வளர்ச்சி ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு பல நூல்களைப் படைத்தும், பல வழிகளில் தொண்டாற்றியும் வருகின்ற முன்னோடி' எனப் பாராட்டிச் சிறப்புச் செய்தது. அப்போதைய கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டத்தையும், பொற்பதக்கத்தையும் வழங்கிச் சிறப்பித் தார். அமைச்சர் கா.காளிமுத்து அவர்கள் பாராட்டையும், துணைவேந்தர் வ.சுப.மாணிக்கம் அவர்கள் தகுதியுரையும் வழங்கினார்கள்.

மொழிபெயர்ப்பு: 'நம் நதிகள்' எனும் தென்னாட்டு ஆறுகள் பற்றிய இவரது நூலை தேசிய மொழிப் புத்தக டிரஸ்ட் 14 இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது. தெலுங்கில் இவரது பாடல் தொகுப்பு ஒன்றும், பல பாடல்கள் ஆங்கிலத்திலும், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் வெளிவந்துள்ளன.

பாட நூல்கள், வானொலி, தொலைக்காட்சி: தமிழ்நாட்டுப் பாட நூல்களிலும், கேரளம், கர்நாடகம், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ் போன்ற நாடுகளில் வெளியான நூல்களிலும் இவரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் வானொலிகளிலும், தொலைக் காட்சிகளிலும் இவரது பாடல்களும், நாடகங்களும் இடம்பெறுகின்றன. இவரது 'நீலா மாலா' நாவல் அதே தலைப்பில் சென்னைத் தொலைக்காட்சியில் தொடராக ஒளிபரப்பப் பெற்றது.

பாடல் ஒலிப்பதிவு: தென் ஆப்பிரிக்காவில் நேட்டாலி லுள்ள தமிழ் வைதீக சங்கம் இவரது பாடல்களில் சிலவற்றை இசைத் தட்டில் பதிவு செய்துள்ளனர். மதுரை காமராஜர் பல்கலைக் கழகமும் வெளிநாட்டில் உள்ள தமிழர்களுக்காகச் சில பாடல்களை ஒலிப் பதிவு செய்துள்ளது. கல்கி அவர்களின் திருமகளார் ஆனந்தி ராமச்சந்திரன் அவர்கள் கவிஞரின் பாடல்கள் சிலவற்றை இசையமைத்து 'அதோ பார் தம்பி' என்ற ஒலிப்பேழையை உருவாக்கியுள்ளார். காம்ப்கேர் நிறுவனம் (Compcare Software (P) Ltd) குழந்தைக் கவிஞரின் பாடல்கள் சிலவற்றை 'பேரன் பேத்தி பாடல்கள்' என்ற தலைப்பில் குறுந்தகடு (VCD) தயாரித்து வெளியிட்டுள்ளார்கள்.

வாழ்க்கை வரலாற்று நூல்கள்: குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வாழ்க்கை வரலாறு - எழுதியவர் பூவண்ணன் - வானதி பதிப்பகம்.

குழந்தைக் கவிஞரின் கதை - எழுதியவர் பூவண்ணன் - மணிவாசகர் பதிப்பகம்.

பிள்ளைக் கவியரசர் வள்ளியப்பா (புதுக் கவிதை) - ஜெயந்தி நாகராஜன்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா - ஜெயந்தி நாகராஜன்

இவரது நூல்களில் ஆராய்ச்சி: *குழந்தைக் கவிஞரின் கவித்திறன் - வெ. கிருட்டிணசாமி - மதுரைப் பல்கலைக் கழகம்.*

குழந்தை இலக்கியத்தில் வள்ளியப்பா ஒரு வழிகாட்டி- கதி. கணேசன் மதுரைப் பல்கலைக் கழகம்.

வள்ளியப்பா பாடல்களில் ஆராய்ச்சி - ஓ. பத்ம குமாரி - கேரளப் பல்கலைக் கழகம்.

குழந்தை இலக்கியமும், குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவும் - அம்புயம் யுவச்சந்திரா - சென்னைப் பல்கலைக் கழகம்.

வாழ்த்தும் கருத்தும்

கவிமணி

பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள்
பாடிப் பாடி மகிழ்வெய்த
தெள்ளத் தெளித்த செந்தமிழில்
தேனார் கவிகள் செய்துதரும்
வள்ளியப்பா...

நாமக்கல் கவிஞர்

இனியபொருள் எளியபதம் இணைந்தவாகி
இளைஞர்களின் மனங்கவரும் கவிகள் பாடி
தனிமுறையில் தமிழ்த் தாய்க்குப் பெருமை கூட்டித்
தகுதிமிக்கோர் புகழ்ந்தபல சான்று பெற்றோன்.

சௌந்தரா கைலாசம்

வையமே வியக்கும் வண்ணம் வள்ளியப்பா! உன் நெஞ்சுள்
தெய்வமே குழந்தை யாகித் திருவிளை யாடல் ஒன்று
செய்வமே என்று மெள்ளச் சேர்ந்ததோ? சிறுவர்க் காகப்
பெய்வமே பாடல் என்று பெய்ததோ! உண்மை பேசு!

ராஜாஜி

(மலரும் உள்ளம் நூல் மத்திய அரசு பரிசு பெற்றபோது) வேறு யாரும் செய்யாத பணி. மேன்மேலும் தமிழ்க் குழந்தைகளுக்காக வள்ளியப்பா உழைப்பாராக. அந்த உழைப்புக்குத் தேவையான ஊக்கத்தை அனைவரும் தருவோமாக.

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை

இனிய தமிழ்ப் பாட்டால் உள்ளத்தை அள்ளும் கவித்திறன் வாய்ந்தவர் வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர்.

தி.ஜ.ர.

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காக ஒரு பெரிய இயக்கத் தையே தோற்றுவித்தவர். பல குழந்தை எழுத்தாளர்கள், தங்களுக்கு வழிகாட்டியாகக் கொண்டு போற்றப்படுபவர்.

பெ. தூரன்

தொடர்ந்து குழந்தை இலக்கியம் படைத்ததோடு, குழந்தை இலக்கியத்திற்கே அதற்குரிய உயர்நிலையை நிறுவுவதிலும் அவர் யாரும் செய்யாத அளவிற்குப் பணியாற்றியிருக்கிறார்.

மீ.ப.சோமு.

குழந்தைகளுக்கு எது வேண்டும், குழந்தைகள் எதைச் சுவைப்பார்கள், எதைச் சுவைக்க வேண்டும் என்றெல்லாம் நன்கு ஆராய்ந்து கண்டவர் வள்ளியப்பா.

அகிலன்

குழந்தைகளுக்கென்று கதை எழுத நிறைந்த மனப் பக்குவம் வேண்டும். குழந்தைகளோடு குழந்தையாகப் பழகக்கூடிய மனம் இயல்பாகவே இருக்க வேண்டும். அவர்களுக்குச் சுவையூட்டும் வகையிலும், பயன் தரும் முறையிலும் கதை சொல்வது அவ்வளவு எளிதான சாதனை யல்ல. ஆனால் வள்ளியப்பா, எப்படியோ குழந்தையாகவே மாறிப்போய், அதே சமயம் அறிவூட்டும் ஆசிரியராகவும் இருந்து கொண்டு இந்த அற்புதத்தைச் செய்து வருகிறார்.

டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்

கவிமணி குழந்தை இலக்கியத்திற்கு வித்திட்டார். முளைத்து வளர்ந்துள்ள குழந்தைக் கவிதையெனும் ஆலின் அடி மரமாகவும், ஆணி வேராகவும் இருப்பவர் வள்ளி யப்பாவே ஆவர். இன்று நூற்றுக் கணக்கில் அந்த ஆலின் விழுதுகள் கவிதை நிலத்தூன்றிக் கவின் செய்கின்றன. குழந்தை இலக்கியத் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஓங்கி வளர்ந்துள்ள இமயம் இவர்.

புலவர் தணிகை உலகநாதன்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நாடறிந்த ஒரு பூஞ்சோலை. ஆயிரம் ஆயிரமான மழலைச் செல்வங்களின் மனக்கோயிலில் என்றும் நீங்கா இடம் கொண்ட தலைசிறந்த குழந்தை எழுத்தாளர். அவர்தம் குழந்தைக் கவிதைகள் இலக்கியச் சோலையில் என்றும் வாடா நறுமலர்கள், குழந்தை இலக்கிய உலகில் அவர் ஒரு விடிவெள்ளி.

K.R. Srinivasa Iyangar (Fellow, Sahitya Akademi)

Mr. Valliappa has made 'Children's Literature' his own elected field and cultivated it with love, dedication and perseverance over a period of several decades... He has also been a force, a movement, a trend-setter and as early as 1950, he brought into being the Association of Tamil Writers for Children and has served the cause of children's literature in Tamil Nadu and all India in many significant ways.

Somaley

Wherever Tamil is spoken and wherever Tamil children live, AL. Valliappa's name is a household name. Valliappa's greatness lies in the fact that he has given his whole life-time to writing for children. He has founded and built up the Children's Writer's Association. He has stimulated writing for children by encouraging many of his readers to write.

Artur Isenberg (Ford Foundation)

The greatest contribution of the Southern Languages Book Trust has undoubtedly been in the vital field of children's books. This, I have always believed and shall go on believing, was above all due to the fact that the Trust was fortunate to have the services of Mr. AL. VALLIAPPA, an inspired, dedicated and competent writer and administrator.

குழந்தைக் கவிஞரின் நூல்கள்

பாடல்கள்

மலரும் உள்ளம் (முதல் தொகுதி)
மலரும் உள்ளம் (2ஆம் தொகுதி)
குழந்தைக் குரல்
சிட்டுக் குருவி
ஈசாப் கதைப் பாடல்கள் - 1
ஈசாப் கதைப் பாடல்கள் - 2
மல்லிகை
கதைப் பாடல்கள் (முதல் தொகுதி)
கதைப் பாடல்கள் (2ஆம் தொகுதி)
சின்னஞ்சிறு பாடல்கள்
பாப்பாவுக்குப் பாட்டு
இனிக்கும் பாடல்கள்
பாட்டுப் பாடுவோம்
சுதந்திரம் பிறந்த கதை
பாட்டிலே காந்தி கதை
சிரிக்கும் பூக்கள்
நேரு தந்த பொம்மை
பாடிப் பணிவோம்
சிறுவர் கதைப் பாடல்கள்
வேடிக்கைப் பாடல்கள் - 1
வேடிக்கைப் பாடல்கள் - 2

கதைகள்

வேட்டை நாய்
ரோஜாச் செடி
உமாவின் பூனைக்குட்டி
அம்மாவும் அத்தையும்
மணிக்கு மணி
மூன்று பரிசுகள்
நான்கு நண்பர்கள்
பர்மா ரமணி
வித்தைப் பாம்பு
எங்கள் பாட்டி
நல்ல நண்பர்கள்
குதிரைச் சவாரி
ரோகந்தாவும் தந்திரியாவும்
சோனாவின் பயணம்
பாலர் கதைகள்
நிமிஷக் கதைகள்
நீலா மாலா

பிற நூல்கள்

வாழ்க்கை விநோதம்
பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள்-1
பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள்-2
கதை சொன்னவர் கதை-1
கதை சொன்னவர் கதை-2
கதை சொன்னவர் கதை-3
சின்னஞ்சிறு வயதில்
எங்கள் கதையைக் கேளுங்கள்
வெளிநாட்டு விடுகதைகள்
மிருகங்களுடன் மூன்று மணி
பிள்ளைப் பருவத்திலே
நேருவும் குழந்தைகளும்
நம் நதிகள்
வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்
வெற்றிக்கு வழி
தென்னிந்திய ஆறுகள்
விடுகதை விளையாட்டு
கேள்வி நேரம்
பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

தமிழன்னை பரிசு

1988

தமிழ்ப் படைப்பிலக்கிய வளர்ச்சிக்குத் தமது சீரிய எழுத்தின் மூலம் வளம் சேர்த்த திரு. அழ. வள்ளியப்பா அவர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழன்னை பரிசினை (ஐயாயிரம் வெண்பொற்காசுகள்) வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.

துணைவேந்தர் இணைவேந்தர் வேந்தர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தமிழ்ச் செம்மல்கள் பேரவை

தமிழகக் கல்வியமைச்சர்

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் அவர்கள்

திரு அழ. வள்ளியப்பா அவர்கட்கு


'தமிழ்ப் பேரவைச் செம்மல்'

என்ற பட்டத்தினைப் பொன்னாடை போர்த்தியும்
பொற்பதக்கம் அளித்தும் வழங்கிய ஞான்று

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

அறிஞர் வ. சுப. மாணிக்கம் அவர்கள்
படித்தளித்த தகுதியுரை


தி. வ. ௨௦௧௨ மார்கழி ௨௫ சனி 9—1—1982



டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடன்



சென்னை ராஜாஜி மண்டபத்தில் குழந்தைக் கவிஞரின் குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்டி டாக்டர் ஜாகீர் ஹுசேன் கேடயம் வழங்குகிறார்.



'நல்ல நண்பர்கள்' நூலுக்கு, தமிழக அரசின் பரிசை வழங்குகிறார் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்.



மணிவிழாவையொட்டி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஏற்பாடு செய்த பாராட்டு விழாவில் ராஜா சர் முத்தையா செட்டியாருடன் மணிவிழாத் தம்பதியர்